# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம், புவியியற்றுறை
## நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2014/2015 (Aug./Sept. 2020)

| GYS 4123 | அரசியல் புவியியல் (Political Geography) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|---|

- பகுதி – I இல் இருந்து எவையேனும் இரண்டு (2) வினாக்களையும், பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று (3) வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** (05) வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி - I

1) அ. அரசியல் புவியியல் (Political Geography), புவிசார் அரசியல் (Geopolitics) ஆகியனவற்றை வரையறுக்குக.

(07 புள்ளிகள்)

ஆ. ஓர் அரசுக்குத் தேவையான அடிப்படை அம்சங்களில் புவிசார் அம்சங்கள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. விளக்குக.

(10 புள்ளிகள்)

2) அ. அரசு என்பதனை வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. அரசு மாறாதது. ஆனால் மாற்றத்துக்குட்படும் பௌதீக, சமூக, பொருளாதார காரணிகளை அடிப்படையாகக்கொண்ட அம்சங்கள் யாதெனக் குறிப்பிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

3) அ. எல்லைகள், எல்லைக் கோடுகள் தொடர்பாக அறிஞர்களின் கருத்துக்களை சுட்டிக்காட்டி விளக்குக.

(07 புள்ளிகள்)

ஆ. எல்லைக்கோடுகளின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு, புவிசார் அரசியல் பின்னணியில் எல்லைக்கோடுகள் வகைப்படுத்தப்படும் பாங்கினை தருக.

(10 புள்ளிகள்)

## பகுதி - II

4) புவிசார் அரசியல் பின்னணியில் நோக்குகின்றபோது, இலங்கையினுடைய அரசியல், நிருவாக முறைமைகள் மற்றும் சமகால அரசியல் போக்கு எவ்வாறு அமைந்து காணப்படுகின்றது என்பது குறித்து ஆராய்க.

(22 புள்ளிகள்)

5) புவிசார் அரசியல் சார்ந்து எழுந்த நில அதிகாரக் கொள்கைகளைக் குறிப்பிட்டு, நடைமுறையில் அக்கொள்கைகளின் பொருத்தப்பாட்டினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(22 புள்ளிகள்)

6) ஐக்கிய நாடுகள் சபையானது உலக சமாதானத்தை நிலைநாட்டும் வகையில் நடைமுறைப்படுத்திவரும் செயற்றிட்டங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

(22 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றில் இரண்டினுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. தொழிற்படு கோட்பாடு
2. குடியேற்றவாதம்
3. ஆட்புல பரப்பு

(2x11=22)